# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2292/31 - 2022 අගෝස්තු මස 09 වැනි අඟහරුවාදා - 2022.08.09

*2292/31 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 09 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**அரசிறைப் பாதுகாப்புக் கட்டளை இல. 04/2022**

*1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டம்*

*1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சருக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பின்பற்றி அவரால் ஆக்கப்பட்ட பின்வரும் கட்டளை பொதுமக்கள் அறியவென இத்தால் வெளியிடப்படுகின்றது.*

**கே. எம். மஹிந்த ஸ்ரீவர்தன,**
செயலாளர்,
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சு,
2022, ஓகத்து 09.


1A - PG 5922 — 481 (2022/08)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டம்**

கட்டளை

1962 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, அரசிறைப் பாதுகாப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 235) 'அட்டவணை அ' இன் கீழான 'பின்னிணைப்பு II' இல் புதிய வரையறை இல. 41 இனை இணைப்பதன் மூலம் 2021, மாச்சு 24 ஆந் திகதிய 2220/42 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலினை, 2022, ஓகத்து 10 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு மேலும் திருத்தியமைப்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

41. பின்வருவனவற்றிற்கு உட்பட்டு, எந்தவொரு அரசாங்க நிறுவனங்கள், அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் எந்தவொரு அரசாங்க நிறுவனங்களுடனும் நேரடி கூட்டிணைவுடன் இடர் நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபடும் நிறுவனங்கள், நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அல்லது அத்தியாவசிய பொது சேவையின் தொடர்ச்சியை பேணுவதற்காக எந்தவொரு வெளிநாடுகள் (அரசாங்கங்கள்), வர்த்தக நிறுவனங்கள் உள்ளடங்கலான நிறுவனங்கள், தன்னார்வ அமைப்புக்கள், மற்றும் நலன் விரும்பிகளிடமிருந்து உதவிகள்/நன்கொடைகளாக பெறுவதற்கு இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசிய பொருட்கள்:

(அ) நன்கொடையினை பெறும் அரசாங்க நிறுவனம் அல்லது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் அல்லது நன்கொடை மற்றும் இடர் நிவாரண நடவடிக்கைகளில் நேரடியாக கூட்டிணைந்துள்ள அரச நிறுவனத்திற்கு பொறுப்பாகவுள்ள செயலாளரின் (பிரதம கணக்கு அதிகாரி) பரிந்துரை, (i) நன்கொடையின் நோக்கம் மற்றும் இலக்கு வைக்கப்பட்ட பயனாளிகள் தொடர்பாக திருப்தியுற்றதன் பின்னர், சுங்க இறக்குமதி தீர்வையினை மட்டும் விலக்களிப்பதற்கு செயலாளரினால் பரிந்துரை வழங்கப்பட வேண்டும்; (ii)மேலே குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரை கடிதத்தை வழங்கும் செயலாளரிற்கு (பிரதம கணக்கு அதிகாரி) அத்தகைய நன்கொடை பொருட்கள் அனுப்பப்பட வேண்டும்; தனித்தனியாக ஒவ்வொரு நன்கொடைக்கும்.

(ஆ) மேலே (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரையின் பேரில் பெறப்படும் எல்லா நன்கொடைகளும் இலங்கை சுங்கத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதியளிக்கப்பட வேண்டும்;

(இ) இந்த நடைமுறையின் கீழ் உதவி அல்லது நன்கொடையாக பெறப்பட்ட பொருட்கள், விதிக்கப்பட்ட நோக்கம்/நோக்கங்கள் மற்றும் பயனாளிகளிற்கு இலவசமாக வழங்குவதற்கு/பகிர்ந்தளிப்பதற்கு மேலே (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள செயலாளர் (பிரதம கணக்கு அதிகாரி) பொறுப்பு மற்றும் பதில் சொல்ல கடமைப்பட்டவர்; மற்றும்,

(ஈ) இந்த நடைமுறையின் கீழ் உதவி அல்லது நன்கொடையாக பெறப்பட்ட எந்தவொரு பொருட்களும் திறைசேரி செயலாளரின் முன் அனுமதி இன்றி விற்கவோ, உரிமை மாற்றவோ, அழிக்கவோ அல்லது மேலே குறிக்கப்பட்ட நோக்கத்தை விட வேறு நோக்கங்களுக்கு பயன்படுத்தவோ கூடாது. அத்தகைய நடைமுறையினை மீறும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும், இலங்கை சுங்கத்தின் பணிப்பாளர் நாயகத்தினால், இலங்கை சுங்கக் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ், பிரயோகிக்கப்படக்கூடிய வரிகளினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு 01,
2022, ஓகத்து 09.

EOG 08 - 0109

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.